வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காட்பாடி ரெயில்வே மேம்பாலம் 3 மாதங்களில் கட்டி முடிக்கப்படும்!

அமைச்சர் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் உறுதி!

வேலூர், ஏப். 19-

வேலூர் மாவட்டம் காட்பாடி ரெயில்வே மேம்பாலம் இன்னும் 3 மாதத்தில் கட்டி முடிக்கப்படும் என்று வாக்கு சேகரிக்கும் போது கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தொகுதி மக்களை சந்தித்து தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அவர் பொன்னை, தேன் பள்ளி, மிளகாய் குப்பம் சேனூர் ஊராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களோடு அமர்ந்து கலந்துரையாடினார்.

அப்போது அவர் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்திய திட்டங்களை பட்டியலிட்டு எடுத்துக் கூறியும், காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் அவர் செயல்படுத்திய வளர்ச்சி திட்டங்கள் குறித்தும் மக்களிடத்தில் எடுத்துக் கூறி பிரச்சாரம் மேற்கொண்டார். கிராம மக்கள் தங்கள் பகுதியில் வளர்ச்சிக்காக பல்வேறு கருத்துக்களை தெரிவித்தனர். அதை அமைச்சர் துரை முருகன் அவர்கள் கேட்டறிந்தார். பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்படும் என்று கூறி அவர் வாக்கு சேகரித்தார்.

அப்போது அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:

என்னைப் பொறுத்தவரை நான் பல ஆண்டுகளாக உங்களோடு இருக்க கூடியவன். இந்த தொகுதிக்கு செய்ய வேண்டியதெல்லாம் செய்து விட்டு அடுத்து வருபவர் களிடம் விட்டுச் செல்ல இருக்கி றேன். நான் முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களோடு 53 ஆண்டுகள் ஒரு சிஷ்யனை போல இருந்துள்ளேன். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சுறுசுறுப்பை பார்த்து அவருக்கு மறு பெயர் உழைப்பு என்று சொன்னார். அதற்கேற்ப முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உழைப்பை பார்த்தால் எப்போது தூங்குகிறார், எப்போது எழுந்திருக்கிறார் என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு வேகமாக எல்லா நாட்களிலும் தன் பணியை ஆற்றுகிற காரணத்தினால் தான் இந்த தமிழகத்தை கொஞ்சம் நிற்கவைக்க முடிந்தது.

தமிழகத்தில் அனைத்து துறைகளை அவர் முன்னேற்றியுள்ளார். தொழிற்சாலைகளை கொண்டு வந்து அவர் உற்பத்தி பெருக்க வேண்டும், மக்களை காப்பாற்ற வேண்டும் என அதற்காக பல திட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறார். காட்பாடி தொகுதியில் பல இடங்கள் அந்த காலத்திலே வளர்ச்சி அடையாமல் இருந்தது. ஆனால் இப்போது அந்த பகுதிகள் வளர்ச்சி அடைந்தது. கழிஞ்சூர் பகுதியை 18 கோடி மதிப்பில் பொழுது போக்கு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொகுதியில் அனைத்து திட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ளது. காட்பாடி ரெயில்வே மேம்பாலம் கட்டுப்பட்டு வருகிறது.

இன்னும் மூன்று மாதத்தில் அது கட்டி முடிக்கப்படும். எந்த பணி என்றாலும் காட்பாடி தொகுதியில் அதை நான் தான் செய்திருக்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

குறிஞ்சிப்பாடி தொகுதி, நடுவீரப்பட்டு மந்தகரையில்

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் நாளை (20.04.2026-திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் குறிஞ்சிப்பாடி தொகுதி நடுவீரப்பட்டு மந்தகரையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை, ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கும் வாக்கு கேட்டு பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார். அதுசமயம் இப்பிரச்சார கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
செயலாளர் - கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

புத்துகோயில் 'முரசொலி' முகவர்

எம்.குமார் இல்லத் திருமண விழா!

கழக நிர்வாகிகள் வாழ்த்து!

திருப்பத்தர், ஏப்.19-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி வட்டம் புத்துக்கோயில் முரசொலி முகவர் எம்.குமார்-விஜயலட்சுமி தம்பதியரின் மகள் கே.ரம்யா, பி.காம் திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஜங்ஷன் எஸ்.தமிழ்ச்செல்வன் -சசிகலா தேவி ஆகியோரின் மகன் டி.லோகேஷ் இவர்களின் திருமணம் நாளை (20.4.2026-திங்கட்கிழமை) அன்று காலை வாணியம்பாடி ஜோலார்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சசிபிரியா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண விழாவில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

தலைமைக் கழக அறிவிப்பு

தேதி	மாவட்டம்	சட்டமன்ற தொகுதி
19.4.2026	திருப்பூர் வடக்கு	அவினாசி
	கோவை மாநகர்	கோவை தெற்கு

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-04-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

13 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!

மண்ணில்
13.12.1926

மனதில்
19.4.2013

செ.குப்புசாமி Ex.M.P.,

தலைவர் – தொ.மு.ச.பேரவை

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த நாள் இன்று!
ஆனது ஆண்டு பதிமூன்று!

மக்கள் அரசின் மாண்பு –
ஜனநாயகத்தின் விடியல்
இவைகளின் முன்மாதிரி "திராவிட மாடல்" வரலாற்றில் –
தொழிற்சங்க விதைகளாய் வாழ்ந்த வேர்முகம்
செ.குப்புசாமி Ex.M.P.,
அவர்களின் – நினைவு நாளில்
என்றும் தளபதியாரின் கொள்கை அணிவகுப்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் தளபதி வழியில்

ராஜா குப்புசாமி
கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர்

சுடர்மணி ராஜா B.B.A., L.L.B.,

தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி! தென்னிந்தியாவைத் தவிர்த்து விட்டு

தாங்கள் நினைத்ததை சாதிக்க நினைத்த பா.ஜ.க.வின் கனவு தவிடு பொடி!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஏப்.19 -

தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்த தன் மூலம் தென்னிந்தியாவை தவிர்த்து விட்டு வடஇந்தியாவை மட்டும் வைத்து தாங்கள் நினைத்ததை சாதிக்க நினைத்த பா.ஜ.க.வின் கனவு தவிடு பொடியாகியுள்ளது என தினகரன் நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:-

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மகோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய பா.ஜ. அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. இதில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டிற்கு, கடந்த 2023ம் ஆண்டின் போது மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட போதே, அடுத்து வந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பா.ஜ. அரசு ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. தற்போது இந்த மகளிர் இடஒதுக்கீட்டை 2029 எம்.பி. தேர்தலில் அமல்படுத்த உள்ளதாகவும் ஒன்றிய பா.ஜ. அரசு தெரிவித்துள்ளது. ஆனால், மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை எப்படி அமல்படுத்த முடியும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இதற்கு பிரதமர் மோடி தரப்பில் இருந்தோ, ஒன்றிய அமைச்சர் அமித் ஷாவிடம் இருந்தோ தெளிவான எந்த ஒரு விளக்கமும் அளிக்கப்படவில்லை.

தினகரன்
ஏப்ரல் 18, 2026 சனிக்கிழமை

பாஜ அரசின் படுதோல்வி

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய பாஜ அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. இதில், 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டிற்கு, கடந்த 2023ம் ஆண்டின்போது மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டபோதே, அடுத்து வந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பாஜ அரசு ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. தற்போது இந்த மகளிர் இடஒதுக்கீட்டை 2029 எம்பி தேர்தலில் அமல்படுத்த உள்ளதாகவும் ஒன்றிய பாஜ அரசு தெரிவித்துள்ளது. ஆனால், மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை எப்படி அமல்படுத்த முடியும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இதற்கு பிரதமர் மோடி தரப்பில் இருந்தோ, ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிடம் இருந்தோ தெளிவான எந்த ஒரு விளக்கமும் அளிக்கப்படவில்லை.

2023ம் ஆண்டில் மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு ஏற்பட்ட காலதாமதத்திற்கு தனது தலைமையிலான ஒன்றிய அரசே பொறுப்பு என்பதை ஒப்புக்கொள்ளாத பிரதமர் மோடி, நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் மீண்டும் பழைய புராணத்தையே பாடியுள்ளார். ஆனால், 'மகளிர் இடஒதுக்கீடு என்ற போர்வையில் வரும் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் நிற்கும்' என எதிர்க்கட்சிகள் உறுதியுடன் நின்றன. மகளிர் இடஒதுக்கீடு அமல்படுத்தப்படாததற்கு விளக்கம் அளிக்காமல், அவர்கள் மீண்டும் மீண்டும் தொகுதி மறுவரையறையை முன்னிறுத்தி பேசினர்.

இதற்கிடையில் தொகுதி மறுவரையறை மசோதா, 33 சதவீதம் மகளிர் இடஒதுக்கீடு உள்ளிட்ட மசோதா விற்கான வாக்கெடுப்பு நேற்று நடந்தது. மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவையாக இருக்கிறது.

அந்தவகையில் 352 ஆதரவு வாக்குகள் தேவையாக இருந்தது. நேற்றைய வாக்கெடுப்பில், 528உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை செலுத்தினர். அதில், 298 உறுப்பினர்கள், 'ஆம்' என்று மசோதாவுக்கு ஆதரவும், 230 உறுப்பினர்கள் இல்லை என்று எதிராகவும் வாக்களித்தனர். இதனால் மசோதா தோல்வி அடைந்தது. தொகுதி மறுவரையறையோடு இணைத்து மகளிர் இடஒதுக்கீடு மசோதாவும் கொண்டுவரப்பட்டதால் அதுவும் தோல்வி அடைந்துள்ளது.

இந்த திருத்த மசோதா நாடாளுமன்றம் விரும்பும் போது மட்டுமே தொகுதி மறுவரையறை செய்யும் அதிகாரத்தை ஒன்றிய அரசுக்கு வழங்க இருந்தது. ஆனால், இந்த தொகுதி வரையறை மசோதா குறித்து எதிர்க்கட்சிகள் கேள்விக்கணைகளை தொடுத்துக் கொண்டே இருந்தன. அவற்றை சமாளிக்க முடியாமல், முதலில் தொகுதி மறுவரையறை மசோதாவில் சில மாற்றங்களை செய்ய ஒன்றிய அரசு ஒப்புக்கொண்டது. தற்போது மசோதா தோல்வியடைந்தது ஒன்றிய பா.ஜ. அரசுக்கு பெரும் பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் பற்றவைத்த நெருப்பு ஒன்றிய பா.ஜ. அரசை சுட்டுள்ளது. இதன் எதிரொலியாக மசோதா தோல்வியடைந்து ஒன்றிய அரசின் தன்னிச்சையாக முடிவெடுக்கும் நடவடிக்கைக்கு கடிவாளம் போட்டுள்ளது. தென்னிந்தியாவில் இருந்து ஓங்கி ஒலித்த குரல்களின் நீட்சியாகவே இந்த மசோதா தோல்வியடைந்ததை பார்க்க முடிகிறது. இதன் மூலம் தென்னிந்தியாவை தவிர்த்துவிட்டு வடஇந்தியாவை மட்டும் வைத்து தாங்கள் நினைத்ததை சாதித்துக் கொள்ள முடியும் என்ற பா.ஜ. தலைமையின் கனவு தவிடுபொடியாகி உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.